**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம்.சி.ஓ.பி.எண். 127/2023** **நாள். 20.06.2024**

2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 20 ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெய்சங்கர் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வேலு | சாதி | |
| கிராமம் | சேனூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 47 |

**ம..சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-1ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 1** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.ஆ.1 – 05.01.2023 பொன்னை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல்.
2. ம.த.சா.ஆ.2 -வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும்மருத்துவமனையில் வழங்கப்பட்ட பிண ஆராய்வுச் சான்று நகல்.
3. ம.த.சா.ஆ.3 -விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆர்.சி. புத்தகத்தின் நகல்.
4. ம.த.சா.ஆ.4 - விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகனஆய்வாளர் அறிக்கையின் நகல்.
5. ம.த.சா.ஆ.5 - விபத்து நடந்த இடத்திற்கான மாதிரி வரைபடம் நகல்.
6. ம.த.சா.ஆ.6 - விபத்து நடந்த இடத்தை குறித்து பார் வை மகஜர்.
7. ம.த.சா.ஆ.7 – விபத்துஏற்படுத்திய ஓட்டுநர் மீது பொன்னை குற்றவியல் நடுவர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த இறுதி அறிக்கை நகல்.

8. ம.த.சா.ஆ8 – விபத்தில் இறந்த வேலு இறப்புச்சான்று நகல்.

9. ம.த.சா.ஆ.9 – 21.02.2023 ம் தேதி காட்பாடி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசுச் சான்றிதழ் நகல்.

10. ம.த.சா.ஆ.10 – விபத்தில் இறந்த வேலுவின் வயது நிரூபிக்கும் ஆதார் அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது).

11. ம.த.சா.ஆ.11 – 1, 2 மனுதாரரின் ஆதார் அட்டையின் நகல். (அசலுடன் ஒப்பிடப்பட்டது)

12. ம.த.சா.ஆ.12 - 1 ம் மனுதாரரின் பேங்க் சேமிப்பு கணக்கு புத்தகத்தின் நகல். (அசலுடன் ஒப்பிடப்பட்டது)

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**குறுக்கு விசாரணை இல்லை.**